பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றுண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனுர்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; துன்முகி: ஆனி கசு 29-[illegible]

OFFICE OF THE REGISTRAR OF

"கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்று"

## திருக்கழுக்குன்றத்தில் திருவடி மண்டபம்

சைவ சமயத்தில் 'திருவடி அமைப்பு' என்பது ஒன்றே ஒன்றுதான்; அது, மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் பெற்றது; திருக்கழுக்குன்றத்தில் வைத்தது!

பெற்ற இடத்தில், மணிவாசகப் பெருமானே திருக்கோயில் அமைத்தார்; வைத்த இடத்தில் தக்கபடி யாதும் அமைய வில்லை.

திருப்பெருந் துறையில் மணிவாசகப் பெருமான் தமக்காகத் திருவடி பெற்றமையால், தாமே திருக்கோயில் அமைத்தார்; திருக்கழுக்குன்றத்தில் உலகவர்க்காகத் திருவடி வைத்தமையால், உலகவர்க்கு அப்படி அமைக்குங் கடமை உண்டு.

'திருவடி' என்பது, பேரின்ப நுகர்வு நிலை; அதனை மற்றவரும் நுகருமாறு செய்வித்தலைத் 'திருவடி தருதல்' 'திருவடி வைத்தல்' என்பர்.

'மாணிக்கவாசகர், சமயகுரவர் நால்வரில் தலைவர்;

மாணிக்கவாசகர் திருவடி பெற்ற இடத்தைவிடத் திருவடி வைத்த இடம் ஆற்றல் மிக்கது! பேரின்ப நுகர்வு நிலை, திருவடி பெற்ற இடத்தில் அவர்க்குத் தொடக்கமா யிருந்தது; வைத்த இடத்தில் நிறைவுற்றிருந்தது.

ஆதலால், உலகவர்க்காகத் திருவடி வைத்த இடமாகிய திருக்கழுக்குன்றம், சிறந்த ஞான பீடம்! உபதேசத் திருப்பது! திருவடித் தலம்! மாணிக்கவாசகர் ஆதீனம்! இந்த நிலையில் இதனை மாட்சிமையுறச் செய்து கொள்ளுதல் அன்பர் கடன்!

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கைபொப்பம்

(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |

ஆயுள்—

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;

மதுராந்தகம் P. O.

(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

—புறநானூறு.


| கிளை | துன்முகி | தளிர் |
|---|---|---|
| 8 | 29-6-56 | 36 |


## கண்டிப்பு

[21-4-56 அன்று கோவை மாமாளியம்மன் திருக்கோவிலில் நடந்த விழாக் கூட்டத்தில் ஆசிரியர் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சுருக்கம்.]

பெரியோர் இடித்துப் பேசித் திருத்தாமையால் மற்றவர் கெட்டுப்போகின்றனர். (அரசியற்) கட்சிகளிலும் அப்படியே. "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்" என்னும்குறள் இங்குக்கவனிக்கத் தக்கது. இடித்துக் கண்டித்துப் பேசுபவர் உடனிருக்க வேண்டுவது மிகவும் தேவை. சிரிக்கச் சிரிக்கப் பேசுபவரெல்லாம் நண்பர்களல்லர். கண்டிப்புள்ளவர்கள் தாம் உண்மை நண்பர்கள். குடும்ப நிலைக்கும் இது ஒக்கும். கண்டிப்பு, அழித்தற்றொழிலாகும். நாடோறும் நாம் செய்யும் வேலைகள் அத்தனையும் அழிப்புத் தொழில்கள்தாம். காட்டாக நிலத்தில் இயற்கையாய் உள்ள செடிகளை அழிக்கின்றோம். உழுது விடுகிறோம். மண்ணை மிதிக்கின்றோம். நாற்றின் வேரை நசுங்கும்படி மண்ணில் புதைய நடுகிறோம். களைச் செடிகளைப் பிடுங்கி விடுகிறோம். விளைந்த பயிரை அறுக்கின்றோம். அதை அடிக்கின்றோம். நெல்லைக் குத்துகின்றோம்; அரிசியை வேகவைக்கின்றோம். வெந்ததை வாயிலிட்டுமென்று விடுகிறோம்; இவை யாவும் அழிவுச் செயல்களே. ஆனால் அச்செயல்களை யாரும் அழித்தல் என்று சொல்லுவதில்லை, ஏனென்றால் இவை அறிவோடு செய்யப்படுகின்றன. அறிவில்லாமல் அழிக்கப்படுவதே அழிவெனப் படுகிறது. அது கெடுதியுமாகும். நல்ல வேலைகள் யாவும் அழிவிலிருந்தே தோன்றுகின்றன; சிற்பி கல்லைச் செதுக்கிச் செதுக்கி அழித்துச் சிற்பத்தை ஆக்குகிறார். ஆனால் அது அழிவெனப்படுவதில்லை.

அழிப்பு, உலகில் இயல்பாய் நடக்கின்றது. அழிப்பைத் தவிர ஆக்கம் என்பதும் காத்தல் என்பதும் வேறு கிடையாது. ஆண்டவன் சத்தி அவ்வாறு வேறு வேலை செய்கின்றது. உயிர்களை மூடியுள்ள அறியாமையைப் போக்குவது அரிசியின் மீதுள்ள உமியைப் போக்குவதை ஒக்கும். அது அழிவாகாது.

அறிவாக அழிகின்ற பார்வதியம்மையே காளியாகும். இந்தக் கருத்துக்களை எண்ணினால் நாமும் கெடுதியை அழித்து நல்லதை வளர்க்கலாம் இக்கருத்துக்களைக் கதையாகச் சொல்லுவார்கள். பார்வதி மலையில் பிறந்ததாகச் சொல்லுவர். மலையில்தான் சத்தியுண்டு. நல்ல பயிர்; பழம் முதலியவெல்லாம் அங்கேயே தோன்றுகின்றன. புராணங்கள் கருத்துக்களை விளக்குவனவே. கருத்துக்களை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இகழக்கூடாது இப்படி ஆராய்ந்து பார்க்கும்போது காளியம்மனின் உண்மையான உருவம் இன்னதென்பது தெரியவரும். தெரிந்தபின் அம்பிகையின் கோபத்தை ஏற்றுத் திருந்திக் கொள்வோம். காளி என்பதும், சத்தி என்பதும், அம்பிகை என்பதும் அருள்

அவர் முதலில் தொல்காப்பியம் சங்க இலக்கியங்களிலும், பின் ஞானசம்பந்தரிடத்திலும், ஈடுபட்டு, பிறகு மாணிக்கவாசகரிடத்தில் மூழ்கிவிட்டார், அவர் இயற்றிய 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலில் அவருடைய எல்லா உயர்ந்த க்ருத்துக்களையும், அவர் செய்த முடிவுகளையும் காட்டினர், அது ஓர் அரிய நூல், அவருக்கு வயது ஆக ஆக இளகிவிட்டார்; அவருடைய நடையிலும் வரவரக் கனிவு மிகுந்துவிட்டது, அத்துடன் சுவையும் மிகுந்தது; அவர் மாணிக்கவாசகரிடத்தில் உருகினர். "பால்நினைந்தூட்டும் ..." புன்புலால்... "அம்மையே அப்பா..." என்னும் பாடல்களை மிகவும் உருக்கத்தோடு அடிக்கடிபாடுவார்; "அம்மையே அப்பா" என்று பாடும்போது கண்ணீர்விடுவார், திருச்சிற்றம்பலக் கோவையாரில் அவருக்கு மிகுந்த விருப்பம்,

விடியலில் எழுந்துகொள்ளக் கூடாதென்று சொல்லுவார், வாழ்க்கையில் ஆங்கில நடையைப் பின் பற்றினர், இரவு 11மணிக்குக் குளிப்பார்: பிறகு வழிபடுவார். 12 மணிக்குப்பின் கஞ்சி உண்பார், இரண்டுமணிக்கு உறங்குவார். காலையில் கஞ்சியும், பகல் 2 மணிக்கு உணவும் உண்பார், அவர் உணவு சத்துள்ளதாய் இருக்கும், நாள் ஒன்றுக்கு 2 பலம் நெய் உண்பார், கஞ்சிஉண்பதற்கு கால் மணி நேரமாகும், அதன் சுவை மாறக் கூடாது, உண்ணும் போது பேசமாட்டார்,

# மறைமலையடிகளார்

[கோவை அருட்கலைக் கழகம், மறைமலையடிகளாரின் கொள்கைகளைப் பின்பற்றும் நோக்கமுடையது; அதன் உறுப்பினர் உணர்ச்சி மிக்க இளைஞர்கள். ஆசிரியர் அவர்கள் கோவையில் தங்கியதைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு ஒரே நாளில் ஆறுவது ஆண்டு விழாவிற்கு ஏற்பாடுகளைச் செய்து அவ் விழாவிற்குத் தலைமை தாங்க வேண்டுமென்றும் தலைமையுரையில் மறைமலையடிகளாரைப்பற்றித் தெரிவிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர் அவர்களின் அன்புகனிந்த வேண்டுகோட்கிணங்க ஆசிரியர் அவர்கள் **22-4-56** ஞாயிறன்று அருளிய தலைமையுரையின் சுருக்கம் வருமாறு.]

ஒரு நாளிலேயே ஆண்டு விழா ஏற்பாடுகளைச் செய்து இன்று ஆறுவது ஆண்டு விழாவை நடத்துவது இக் கழகத்தாரின் உணர்ச்சிச் சிறப்பைக் காட்டுகிறது. கையாளப்பட்டது ஆண்டாகும். காலத்தின் அருமை தெரிந்து வீண்போக்காமல் ஒவ்வொரு நாளையும் பயன்படுத்திக்கொண்டதால் அந்தக் கால அளவுக்கு ஆண்டு என்று பெயர் வந்தது; சென்ற

ஆண்டு இக் கழகத்தாரால் அவ்வாறு பயன்படுத்தப்பட்டதென்பதை இவ்வாண்டு விழா காட்டுகிறது.

கழகம் என்பது கல்விக் கூடம். கல்வி என்பது ஆழ்ந்து போதல். ஆழ்ந்து சொக்கிப் போகும் முறையில் செயலாற்றுவது கல்விக் கூடம். [பட்டிமண்டபம் என்பது அவரவர் கருத்தை எடுத்துக் காட்டும் இடம். வேற்றுமை பாராமல் மனதில் பட்டதை எடுத்துச் சொல்லுமிடம்; சான்றோர்களுக்குத் தமக்குரிமையான கருத்துக்கள் தோன்றும். சங்க காலத்தில் நம் நாட்டில் பட்டி மண்டபங்கள் பல இருந்தன.]

ஐம்புலனால் காணப்படுவது பொருள். பொருள்களால் உயிர்களுக்குத் துய்ப்பு உண்டாகின்றது. தக்க முறையில் துய்ப்புகளைப்பெற்றால் அருள்;வரும் அது மறைபொருளாக நிகழ்கிறது. பொருளோடு தொடர்புடையது உடல்; அருளோடு தொடர்புடையது உள்ளம். இடையே இருப்பது வாக்கு; இதன் வேலை ஏணியின் வேலையைப் போன்றது. அது மக்களைப் பொருளிலிருந்து அருளுக்குக் கொண்டு செல்லும். இச் சிறப்பு விலங்குகளுக்கில்லை. இந்த வாக்கின் நிகழ்ச்சியே அதாவது பொருளுணர்ச்சியிலிருந்து அருளுணர்ச்சிக்குக் கொண்டு செல்வது கலை. பொருளாளரை அருளாளராக்கக் கலைஞர் தேவை.

மனிதன் மனிதனாக வாழ்வது இயல்பு. தெய்வமாக உயர்வதுதான்தேவை. அதுபோலக் கலை, கலைக்



போகிறதே!'' என்றும் சொன்னார்; அன்று கழற்றி விட்டேன், பிறகு கற்பித்து வளர்த்தார்.

உடன் படிப்பவர்களுள் ஆராய்ச்சி, போட்டிகளை உண்டுபண்ணி மகிழுவார், தமிழிலேயே பேச வேண்டுமென்று கட்டுப்படுத்துவார் ஒரு தமிழ்ச் சொல்லுக்கு வேறாக ஒன்று சொன்னால் ஈடு தர வேண்டுமென்று ஒரு முறை இருந்தது, நான் அதிகமாகக் கொடுக்க வேண்டி நேரிடும்.

ஒருமுறை வண்டியில் சென்றுகொண்டிருந்தபோது வெந்நீர் உண்டா என்று கேட்டார், ''FLASKல்இருக்கிறது'' என்றுகொண்டுசென்றேன்; ஆங்கிலச் சொல்லைச் சொன்னதற்காக நெடுந்தொலைவு (திருப்பைஞ்ஞீலி) செல்லும் வரை திட்டினார். தனித்தமிழ் உணர்ச்சி இல்லாததால் தமிழுக்குத் தீங்கு செய்வதாக சொன்னார், கண்டிக்கும்போது நாங்கள் தனியே சென்று வருந்திவிட்டு வருவோம். இவ்வாறு அவர் எங்களைத்திருத்தினார். தமிழில் மூலச் சொற்களைக் காட்டி விளக்குவார், மூலத்தைத் தெரிந்து உணர்ந்து படிக்க வேண்டுமென்பார். 'மணம்' என்னும் சொல்லிருக்கும்போது 'வாசனை' என்று சொல்லக் கூடாது என்பார், 'வஸனை' என்பதைவிட மணம் என்று சொல்லுவதில் உள்ள உயர்வையும் எடுத்துக் காட்டுவார், மணம் என்பது மண்ணிலிருந்து தோன்றுவது (காற்றிலிருந்து வருவதன்று) என்பதை அச் சொல்லே காட்டுகிறது, வாசனை என்பதில் அவ்வாறு காட்டக் கூடியது ஒன்றுமில்லை என்பார்.

வார், அவர் சொல்லுவதை மிகவும் சுறு சுறுப்பாக வாங்க வேண்டும்.

ஆசிரியரிடம் இருந்து பாடம் கேட்கும் முறை இன்று குறைந்துபோய் இருக்கிறது. இன்றுள்ள கல்லூரிப் படிப்பு போதாது, அதன் பிறகேனும் ஒரு தனி ஆசிரியரிடம் பாடம் கேட்க வேண்டும். அடிகளாரிடம் பாடம் கேட்டபின் மற்றவரிடம் சுவைக்காது. அப்படிப்பட்ட பெரிய சொத்து எனக்குக் கிடைத்தது. அதனால் இப் பிறவி சிறந்ததேயாகும் வித்வான் படிப்புக்குப்பின் தக்க ஆசிரியரிடம் பாடம் கேட்டால்தான் புலமை வரும், முதலில் அடிகளாரை இராயப்பேட்டையில் ஓர் அவையில் பார்த்தேன். 'ஓம்' என்னும் பொருள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப் பேச்சு நன்றாய் இழுத்துவிட்டது. அவர் மாளிகைக்குப் போகும்போதே உள்ளம் இறும்பூதெய்தும், தன்வயமற்றுக் காந்தம்போல் இருக்கும்; அவர் தோற்றமே நல்ல உணர்ச்சிகளைத் தரும், அவரைப் பார்த்தாலும், அவர் நடையைப் பார்த்தாலும் அவர் திட்டினாலுங்கூட இன்பமாய் இருக்கும், ஒரு முறை என்னை அழ வைத்திருக்கிறார்; பின் அணைத்து ஆறுதல் சொல்லி இருக்கிறார்.

என் மாணவர்கள் போட்ட அணிகலன்கள் சிலவற்றை நான் அணிந்திருந்தேன். அது அவருக்குப் பிடிக்கவில்லை. ''இவற்றை ஏன் போட்டுக்கொண்டாய்? இவை நிரம்ப அழகாக இருக்கின்றனவா என்றார்; ''இந்த அழகில்உன் எண்ணம்



காகவே இல்லை. கலை அருளுக்காகவே உள்ளது இந்த நிலை தவறினால் கீழே போகும்; எதுவும் ஒரே இடத்தில் என்றும் இருப்பதில்லை. மேல் நோக்கியோ கீழ் நோக்கியோ போய்க் கொண்டே இருக்கும். இக் கருத்துக்களை எல்லாம் விளக்கும் முறையில் இக் கழகத்தின் பெயர் 'அருட் கலைக் கழகம்' என்று அமைந்துள்ளது; இக்கழகம், கலையின் மூலமாக மக்களை அருளுக்கு ஏற்றிச் செல்கிறதென்பதைப் புலப்படுத்துகிறது. கழக உறுப்பினர் இந்த நோக்கத்தை உடையவர்களாய்க் காணப்படுகின்றனர்; அதோடு, மறைமலையடிகளாரைப் பின்பற்றுவது என்று சொன்னபோது இந்தக் கலை நன்கு விளங்கும் என்று தோற்றுகிறது.

நம் நாட்டில் தமிழ் என்றால் மறைமலையடிகளாரைத்தாம் நினைப்பார்கள். இப்பொழுது அவரைப் போன்றவர் இல்லை, அதற்குப் பல காரணங்களுள்ளன. நெடுங்காலத்துக்கு முன்பிருந்த மாதவ சிவஞான யோகிகளுக்குப்பின் அடிகளாரைப் போன்று யாரும் அமையவில்லை. திருவருள் செயலால் இனி அமையலாம்; அடிகளார் உணர்ச்சியில் இளைஞர், உயரம், தோற்றம், அழகு, இனியகுரல், எதிர்த்து விளங்கும் வீரம்உடையவர்; அவர்க்கென்று தனி நடை, உடை, பாவனைகளுண்டு; ஜான்ஸனைப் போல எதிரற்றவர். தக்க தோற்றமுடையவர் மற்றவர் இவருக்கு இணங்கி நிற்பவரே. இவரை மறுப்பவர் சுலபமாக மறுத்துவிட முடியாது. அப்

படி யாரேனும் மறுத்தாலும் மறுப்பவரை மற்றவர்கள் விரும்பமாட்டார்கள்.

தமிழ், ஆங்கிலம், வடமொழிகளைப் பயின்றவர்; ஆங்கிலத்தில் அவர் காலத்து நூல்களெல்லாம் அவர் உள்ளத்தில் பதிந்தன; வடமொழியில் எல்லாம் கண்டவர்; தமிழில் ஆட்சியுடையவர். ரூ 20,000 பெறுமான நூல்கள் அவரிடம் உண்டு. நூல்களை வாங்குவதும் படிப்பதும் அவருக்குத் தவம் போல; அதில் அவருக்கு மிகுந்த வேட்கை இருந்தது, விளம்பரங்களில் புதிய நூல்கள் வெளிவருவதாகக் கண்டவுடன் வாங்கிவிடுவார்; வாங்கியவற்றைப் படித்துவிட்டுதான் மற்ற வேலைகளைச் செய்வார். சிறிது சிறிதாக அசைபோடுவது போலப் படிப்பார்; குறிப்பு எல்லா நூல்களிலும் இருக்கும்; இருபதாண்டுகளுக்கு முன்பு படித்ததானாலும் இன்ன இடத்தில் இன்னது உண்டென்று அவருக்குத் தெரியும். நூல்களைப் போற்றுவது அவருக்குத் தெய்வத்தைப் போற்றுவதைப் போன்றது; திருவாசகத்தின்மேல் ஒரு நூலை வைத்துவிட்டால் வருந்துவார். நூலைப் படுக்க வைக்கமாட்டார். சங்கநூல்கள் மேல் ஒன்றும் வைக்கமாட்டார். தேவார திருவாசகங்களுக்குத் தனி இடமுண்டு; சமயத் துறை நூல்களிலும் முழு முதலைப் பற்றிய நூல்களுக்குத் தனிஇடமும், மற்றச் சமய நூல்களுக்கும், குருமார்கள் நூல்களுக்கும் தனித்தனி இடங்களும்உண்டுகுரான்,தேவாரதிருவாசகங்களுக்கு அடுத்து இருக்கும்; குரான் முழு முதலை உணர்த்துவதால் அவ்வாறு அமைத்திருப்பார். அதற்



கேற்றபடியே உள்ளத்திலும் தரங்களுண்டு; நாங்கள் அவர்மாளிகைக்குமாதத்திற்கொருமுறைபோவோம்; அங்கு ஒரு கிழமை அல்லது ஒரு மாதம் இருந்துவிடுவோம். அவர் 'போ' என்றால்தான் போக வேண்டும்.

மாலை 7–30 மணிக்கு நாங்கள் போவது வழக்கம். போகும்போதெல்லாம் அவரைப் படித்த வண்ணமாய்க் காண்போம், அது தவறாது. 6 மணியிலிருந்து அவர்படிக்கத் தொடங்குவார்; திங்களன்றும் வெள்ளியன்றும் இறை தொடர்புள்ள நூல்களையே படிப்பார். எதுவும் கால அட்டவணைப்படி நடக்கும்; அட்டவணை அவர் எதிரிலேயே இருக்கும். அவரிடம் திட்ட வட்டமும் கண்டிப்பும் அதிகம், விளக்கில் சிறிது மாசு இருந்தாலும் விளக்குவைத்தவரை விடமாட்டார். உண்ணும் கஞ்சியின் அளவு சுவை ஆகிய எல்லாவற்றையும் கவனிப்பார்; படிப்பில் மிகுந்த வேட்கையுண்டு, நேரந் தவறி யாராவது வந்துவிட்டால் இருக்கச் சொல்லியோ அல்லது வேறு நேரத்தில் வரச் சொல்லியோ தம் கடமையைச் செய்வார்; அதனாலேதான் ஆழ்ந்த கல்வி இருந்தது

பாடம் நெடுநேரம் சொல்லமாட்டார், சொல்லும் சிறிது நேரமும் பேசுவதுபோலத்தான் இருக்கும்; அதற்கிடையே சில சூத்திரங்களை நடத்தி விடு

### திருக்கழுக்குன்றம்

# திருமுறை இன்னிசைப் பெருவிழா

(11, 12, 13-7-56 புதன், வியாழன், வெள்ளி)

அருள்திரு — குன்றக்குடி அடிகளார்

,, சித்பவாநந்த அடிகளார் (திருப்பராய்த்துறை)

,, மதுரை அடிகளார்

மூன்று நாட்களிலும் தலைமை ஏற்றருளுவர்:

பேரறிஞர், கலைஞர் ஓதுவார் பலர் கலந்துகொள்கின்றனர்:

அன்பர்கள் திரண்டு வருக!
அருளமுது உண்டு மகிழ்க.

—சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர்

குறிப்பு — திருக்கழுக்குன்ற விழாத் தொடர்பாக 7-7-56 முதல் 9-7-56 வரையில் குருகுலம் (வடதிருச் சிற்றம்பலம்,) மதுராந்தகம், கருங்குழி, ஏறுபாக்கம், பூதூர், வல்லிபுரம், வழூவத்தூர் வழியாகத் திருக் கூட்டத்தார் அங்கங்கும் திருமுறைகளுடன் தங்கித் தங்கித் திருவடி வழிபாடும்; சங்க இலக்கியம், மெய் கண்ட நூல், பட்டினத்தார், தாயுமானுர் முதலிய அருள் நூல் விழாக்களும் செய்துகொண்டு 10-7-56— செவ்வாய் அன்று திருக்கழுக்குன்றம் சேர்வர்.

### குருகுலத்தார்

# சோழநாட்டு யாத்திரை

திருக்கழுக்குன்ற விழா நிகழ்ந்தபின், மறுவாரத்தில் குருகுலத்தார், யாத்திரை புறப்படுவர், யாத்திரை 15—நாள் நிகழும். இந்த ஆண்டில் பாடல் பெற்ற சோழநாட்டுத் திருப்பதிகள் நிறை வெய்தும்,

—குருகுலத்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

என்பதும் ஒன்றே. அருளுக்குமேல் ஓர் ஆற்றல் கிடையாது.

வெறும் விழாக்கள் செய்வதைவிட கருத்துக்களைத் தெரிவிக்கச் செய்வது நல்லது. முன்னதற்குச் செய்யும் செலவைவிடப் பின்னதற்குப் பல மடங்குகள் செய்யவேண்டுவதுமுறை; ஆனால் அவ்வாறு இன்று நடப்பதில்லை. நடக்குமானல் மன்பதை தெளிவடையும்.

Phone 55034 Tel Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

# பெற்றோர்க்கு வேண்டுகோள்

அமைப்பு:

இக் குருகுலம் நாலா பக்கக் கிராமங்களுக்கும் நடுவில், சாலை ஓரத்தில் அமைந்திருக்கிறது; பல கிராமத்தார்க்கும் உதவியாக இருக்கவேண்டும் என்பது நோக்கம்.

6–ம் வகுப்பு:

இதுவரையில் குருகுலப் பாடசாலையில் 5–வகுப்புகள் இருந்தன; இந்த ஆண்டிலிருந்து 1956 ஜூன் முதல், 6–ம் வகுப்பும் நடத்த, அரசினர் இசைவு கிடைத்திருக்கிறது. தொடக்கப் பள்ளியாய் இருந்த குருகுலம், உயர் தொடக்கப் பள்ளியாய் (**Gurukulam Higher Ele. School**) உயர்ந்திருக்கின்றது.

கோடை விடுமுறைக்குப்பின் 4–6–56–ல் பாடசாலை திறக்கப் பெற்றது: அன்றிலிருந்தே ஆறும் வகுப்பும் ஆரம்பம்.

கவனிப்பு:

உயர்தரப் பாடசாலையிற் போலவே, தக்க திட்டங்களுடன் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஒவ்வோர் வகுப்புக்கும் தேர்ச்சி பெற்ற தனித்தனி ஆசிரியர் உள்ளனர்.

கல்வியுடன் கைத்தொழிலும் கற்பிக்கப்பெறுகின்றது; பண்புடன் பழக்கவழக்கங்களும் கவனிக்கப்பெறுகின்றன.

சுற்றுப் புறத்தார்க்கும் நாட்டுக்கும் இக் குருகுலம் ஓர் ஒளி! எல்லார்க்கும் இது சேவை செய்ய விரும்புகிறது.

உணவு விடுதி:

தொலைவில் உள்ளவர்களுக்காகவும் ஏழைகள் திக்கற்றவர்களுக்காகவும் இக் குருகுலத்தில் 'மாணவர் இல்லமும்' இருக்கின்றது; உணவுக்காகப் பெற்றோரும் மற்றோரும் விரும்பித் தரும் உதவியைக் குருகுலம் ஏற்றுக்கொள்ளும்.

வேண்டுகோள்:

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்க்கும் ஊக்கம் வேண்டும்: நமது நாடு கல்வியில் எவ்வளவோ உயரவேண்டும்; கல்வி ஓங்கினால் எல்லா நலங்களும் ஓங்கும்.

ஆதலால், பெற்றோர், தங்கள் பிள்ளைகளை உடனே பாடசாலையிற் சேர்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் (அஞ்.)
4–6–56.

—குருகுலத்தார்

குறிப்பு:–4–6–56 முதல் ஜூன் மாதம் முழுவதும் குருகுலத்திற் பிள்ளைகள் சேர இடமுண்டு; ஹரிஜனப் பிள்ளைகளும், 'பள்ளி' 'இல்லம்' இரண்டிலும் சேரலாம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்.)